# மீண்டு(ம்) வரும் சைக்கிள் கலாச்சாரம்



சுமார் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மிதி வண்டி என்பது (சைக்கிள்) பலரின் கனவு வாகனம் இருந்தது. ஒருவரிடம் மிதிவண்டி இருந்தால் சற்று வசதிப் படைத்தவர் என்ற நிலைமை இருந்த காலம். ஒரு சில வீடுகளில் மட்டுமே இந்த மிதி வண்டியை காண முடியும். வேலைக்கு போவது, தொழில் செய்யவது என அன்றாட நிகழ்வுக்கு முக்கியப் பங்காற்றிய இந்த மிதிவண்டி ஒரு காலத்தில் போக்குவரத்திற்கு முக்கியமாக திகழ்ந்தது ஆனால் இன்றைய தொழிநுட்ப காலத்தில் கார், பைக் என பலக் கண்டுபிடிப்புகள் வந்ததும், நம்வீட்டில் முடங்கி, காணாமல் போன ஒரு பொருளாக மாறி விட்டது மிதி வண்டி (சைக்கிள்).

அன்றையக் காலகட்ட வாழ்க்கையில் மிதிவண்டி என்ற வார்த்தை இல்லாமல் கடந்திருக்க முடியாது, மாணவர்கள் முதல் வேலைக்குப் போகும் பெரியவர்கள் வரை மிதிவண்டியை பொக்கிஷமாகப் பார்க்கப் பட்டது.

## மீண்டு(ம்) வரும் கலாச்சாரம்:

பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சைக்கிள் கலாச்சாரம் தற்போது மீண்டும் புத்துயிர்ப் பெற்று வருகிறது. இன்று பெருபாலானவர்கள் சைக்கிள் ஓட்டுவதை ஒரு நல்ல உடல் பயிற்சியாக கருதுவதால் இது தற்போது பிரபலம் அடைந்து வருகிறது. பலர் காலை மற்றும் மாலை வேளைகளில் சைக்கிள் ஓட்டி வருவதைக் காண முடிகிறது.

இதனை ஊக்குவிக்கும் விதமாக பல பிரபலங்கள் குறிப்பாக தமிழக முதல்வர் ஸ்டாலின், சைலேந்திர பாபு, நடிகர் ஆர்யா போன்ற பலர் இதனை தொடர்ச்சியாக செய்து வருவது இளைஞர்கள் இடையே தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் பலரும் இன்று சைக்கிள் ஓட்டுவதை வாடிக்கையாகிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

## சைக்கிள் போட்டிகள் :

பல இடங்களில் சைக்கிள் போட்டிகள் நடைப் பெற்றுவருவதை நாம் அறிவோம். இன்றைய நவீன உலகில் காலத்துக்கேற்ப புதிய முயற்சியை கையில் எடுத்துள்ளனர் அன்ட் ரன்னர். இயக்குனரும், நடிகருமான கோவையை சேர்ந்த விஜய் ஆனந்த் மற்றும் அவரது நண்பர் கார்த்திகேயன் இருவரும் சேர்ந்து அன்ட் ரன்னர் என்ற பெயரில் மாரத்தான் மற்றும் சைக்கிள் போட்டிகளை விர்ச்சுவல் முறையில் நடத்தி வருகின்றனர். உலகம் முழுவதிலும் இருந்து பெருபாலானவர்கள் விர்ச்சுவல் முறையில் இந்த போட்டியில் கலந்துக் கொண்டு பரிசுகளை வென்றுள்ளனர். மக்களுக்கு உடல் நலத்தின் மீது விழிப்புணர்வு ஏற்படுத்துவது மட்டும் இல்லாமல் அவர்களை ஊக்குவிப்பதற்காக போட்டிகளில் கலந்துக் கொண்டு இதனை தொடர்ந்து நடத்தி வருவதாகக் கூறுகிறார் விஜய் ஆனந்த், மேலும் இதனைப் பற்றி தெளிவான விளக்கம் அளித்து அவர் கூறியது...

“நான் மாரத்தான் ஓட ஆரம்பித்தவுடன் ஆர்வம் அதிகமானது என்னுடைய கல்லூரி வாட்ஸ் ஆப் குரூப்பில் தினமும் என் நண்பர்களுக்கு இதை பகிர்வேன் அதில் பலரும் இதுபோல மாரத்தான் மற்றும் சைக்கிள் ஒட்டி அவர்களது புகைப் படத்தை பகிர்வார்கள். பெங்களூரில் வசிக்கும் என் நண்பர் ரமேஷ் விளையாட்டுப் போட்டிகளில் அதிகம் நாட்டம் கொண்டவர், அவர்தான்.இந்த அன்ட் ரன்னர் ஆரம்பிக்கும் யோசனை கூறினார் இதற்கான பெயர் தேட இறங்கியப் பொழுது, அனைவரையும் கவரும் விதமாக இருக்க



விஜய் ஆனந்த்

கார்த்திகேயன்

வேண்டும் என்ற நோக்கத்தில் தேடும் பொழுது அன்ட் ரன்னர் என்ற பெயர் கிடைத்தது. அன்ட் ரன்னர் மூலமாக இதை ஒரு பெரிய நிகழ்வாக செய்யலாம் என ஈரோட்டில் இருக்கும் என் நண்பர் கார்த்திகேயேன் கூறிய ஆலோசனைப் படி அன்ட் ரன்னர் தொடங்கப்பட்டது இதில் பங்கேற்பவர்களுக்கு பரிசுகளை வழங்கினால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக இருக்கும் என்பதால் அதனையும் மேற்கொண்டோம்.



காலை வேளையில் சைக்கிள் ஓட்டுவது மனதுக்கு புத்துணர்ச்சியை தருகிறது, நமக்குள் இருக்கும் மனச் சுமையை இறக்கி வைக்க உதவுகிறது. பிரச்சனைகள் அனைத்தும் மறந்து நாம் காலை வேளையில் சைக்கிள் ஓட்டும் பொழுது புதிய சிந்தனை, புதிய பாதை மற்றும் வாழ்க்கையில் வெற்றி பெற உதவுகிறது. முக்கியமாக நாம் ஆரோக்கியமாக வாழ நமக்கு வழிவகை செய்கிறது. இவ்வாறு விஜய் ஆனந்த் கூறினார்.

## நன்மைகள் :

சைக்கிள் ஓட்டுவது இதய நோய், சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க உதவுகிறது. சைக்கிள் ஓட்டுவதன் மூலம் பல நோய்களின் தாக்கத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கவும் எரிபொருள் செலவை மிச்சப்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாப்பாக வைக்க உதவுகிறது.


